**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

அசல் வழக்கு எண்.210/2023

நாள்: 17.07.2025.

பெயர்: ஜெயராமன் (வா.சா.1) த/பெ: ஜெகநாதன்

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை...</u>

1) வழக்கு சொத்தானது புஞ்சை நிலமாகும். நான் வழக்கில் எந்த சொத்திற்காக பரிகாரம் கேட்கிறேன் என்றால் சர்வே எண்.46/10A ஆகும். நான் சர்வே எண்.46/10B யில் எந்தவித பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தானது ஆதியில் 20 ஆண்டுகளுக்கு முன்பு ஒரே சமதளமாக இருந்தது என்றால் சரிதான். பிரதிவாதி இடத்தைக் காட்டிலும், எனது இடம் மேடாக உள்ளது என்றால் இல்லை, சமமாக தான் உள்ளது. மேற்படி எங்கள் இடமானது சமமாக உள்ளதா, மேடாக உள்ளதா என்பதனை நீதிமன்ற ஆணையர் வைத்து பார்வையிட்டால் தெரியவரும் என்றால் சரிதான். எனது சொத்தில் நான் மண் அடித்து மேடாக்கி விட்டேன் என்றால் சரியல்ல. எனது கிராமத்தில் சதாசிவம் பஞ்சாயத்து தலைவராக இருந்தபோது சுமார் 300 டிராக்கடருக்கு மேல் மண்ணடித்து எனது பகுதியை மேடேற்றிவிட்டேன் என்றால் சரியல்ல.

2) நான் எனது நிலத்தை மேடாக மாற்றிய காரணத்தினால் தான் மழை காலங்களில் பிரதிவாதி நிலத்தில் அளவிற்கு அதிகமாக தண்ணீர் சென்று அவரது பயிர்கள் பாழாகிறது என்றால் சரியல்ல. நான் எனது இடத்தை மேடாக்கியதால் பிரதிவாதியால் விவசாயம் செய்ய முடியாத காரணத்தினால் அவர், ஆர்.எஸ். பதி மரங்கள் மட்டும் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி விவசாயம் செய்ய முடியாமல் போனதற்கான காரணம் நான் தான் என்றால் சரியல்ல. நான் வசதிபடைத்த காரணத்தினால் எனது நிலத்தை மட்டும் மண்ணடித்து மேடாக்கி, காலங்களுக்கு ஏற்றவாறு விவசாயம் பயிர் செய்து அதிக லாபம் ஈட்டி வருகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது நிலத்தை மேடாக்கிய காரணத்தினால் தான் பிரதிவாதியின் ஆர்.எஸ் பதி மரங்களும் அதிகமான மழை

நீரினால் வேர் அழுகி பாழாகி, நஷ்டம் அடைகிறார் என்றால் சரியல்ல, என்னுடைய சொத்து பிரதிவாதிகளின் சொத்தை விட 1.5 அடி மேடு பகுதியாகும். எனது சொத்து நிஜத்தில் 1.5 அடி மேடு கிடையாது என்றாலும், 5 அடி மேடு என்றாலும் சரியல்ல, நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டால் தெரியும்.

3) சர்வே எண்.46/11 தென்மேற்கு பகுதியில் அரசு சர்வே கற்களை பிரதிவாதி பிடுங்கி எடுத்துவிட்டார் என்பதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. மேற்படி சர்வே கற்களை பிரதிவாதி பிடுங்கவில்லை, அவர் மீது அபாண்டமாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது நிலத்தை இயற்கைக்கு மாறாக மாற்றி அமைத்ததன் காரணத்தினால் தான் பிரதிவாதிக்கு நஷ்டம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எனது நிலத்தில் தற்போது பயிரிட்டுள்ள சவுக்கு மரங்களுக்கு முன்னர் என்ன பயிர் செய்தேன் என்றால் கடலை, எள், தர்பூசணி, முருங்கை ஆகியன பயர் செய்தேன்.

4) பிரதிவாதியின் ஆர். எஸ் பதி மரங்கள் எனது அத்திலிருந்து மூன்று அடி இடம் விட்டு பயர் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, சில மரங்கள் எனது வரப்பின் மேல் பயிரிடப்பட்டுள்ளது. மேற்படி எனது வரப்பின் மேல் பிரதிவாதி மரம் நட்டதை நான் எனது வழக்குரையிலோ, எனது முதல் விசாரணையிலோ கூறியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கிற்காக தற்போது வரப்பில் மரம் இருப்பதாக பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் எனது கட்சியில் பிரதிவாதி பூவரச மரத்தை வெட்டியுள்ளார் என்று கூறியுள்ளதும், பொய் என்றால் சரியல்ல. மேற்படி பூவரச மரத்தினை நானே வெட்டிவிட்டு பிரதிவாதி வெட்டிவிட்டார் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

5) மேற்படி பூவரச மரத்தின் மதிப்பானது ரூ.5000/- என நான் கூறியது பொய் என்றால் சரியல்ல. நான் எனது பகுதியில் மண் அடித்து மேடாக்கியதால் தான் பிரதிவாதியின் முப்போக விளையக்கூடிய விவசாய நிலமானது பாழாகி, பிரதிவாதிக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 20 ஆண்டுகளுக்கு முன்பு இருந்த வடிகால் அமைப்பு போன்று தற்போது இருந்தால் மழை நீர் வடிந்து

பிரதிவாதி நிலத்தில் நன்றாக விவசாயம் செய்ய முடியும் என்றால் சரியல்ல. பிரதிவாதி இடத்தில் அவர் சட்ட முறைப்படி அனுபவிக்க உரிமை உள்ளது, அதன்படி அவர் பயிர் செய்துள்ள ஆர் எஸ் பதி மரத்தினால் எனக்கு எவ்வித இழப்பும் ஏற்படுத்தாத காரணத்தினால், பிரதிவாதியின் ஆர்.எஸ். பதி மரங்களை வெட்ட சொல்வதற்கு எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

6) பிரதிவாதியின் ஆர்.எஸ். பதி மரங்களினால் எனக்கு எவ்வித இழப்பும் ஏற்படாதபட்சத்தில் அவர் மீது தவறாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி சொத்திற்கு வடபுறமும், கீழ்புறமும் எனது சொத்து அமைந்துள்ள காரணத்தினால் அவரது நிலத்தை நான் அபகரிக்க வேண்டும் என்ற காரணத்தினால் பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 20 ஆண்டுகளுக்கு முன்பு எனது இடத்தில் வடிகால் அமைப்பு இருந்தவாறு தற்போதும் இருந்திருந்தால் பிரதிவாதி நன்றாக விவசாயம் செய்ய தயாராக இருக்கிறார் என்றால் சரியல்ல. எனக்கு ஆர்.எஸ் பதி மரங்களினால் எவ்வித இடையூறும் இல்லை என்பதால் தாவாப்படி எனக்கு எவ்வித பரிகாரமும் கிடைக்காது என்றால் சரியல்ல. செலவுத்தொகையுடன் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—திரு. ம.சி. கண்ணதாசன், எம்.எல்.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.